## பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 15 பெப்ரவரி 2021

Nestlé
Good food, Good life

**2021 ஆம் ஆண்டிற்கான SALARY for LIFE ஊக்குவிப்பை *நெஸ்டமோல்ற்று* ஆரம்பித்துள்ளதுடன், இரண்டாவதாக வெற்றியாளராக மாறவுள்ளவருக்கு 55 வயது வரை மாதந்தோறும் ரூபா 50,000 தொகையையும் வழங்கவுள்ளது**

'SALARY for LIFE' என்ற தனது தனித்துவமான ஊக்குவிப்பை இரண்டாவது ஆண்டாகவும் முன்னெடுக்கும் ஏற்பாடுகளை *நெஸ்டமோல்ற்று* ஆரம்பித்துள்ளதுடன், இதன் மூலமாக வெற்றியாளராக மாறவுள்ள மற்றுமொரு நுகர்வோருக்கு இப்போட்டியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக 55 வயது வரை மாதந்தோறும் ரூபா 50,000 தொகையையும் வழங்கவுள்ளது. விசுவாசம் மிக்க தனது நுகர்வோருக்கு வாழ்க்கையை சிறப்பாக ஆரம்பிக்க உதவி, வாழ்வில் தமது இலட்சியங்களை அடைந்து, உயர்வு பெற உதவுவதே *நெஸ்டமோல்ற்றின்* நோக்கமாகும். 18 முதல் 50 வயதுக்கு இடைப்பட்ட எந்தவொரு *நெஸ்டமோல்ற்று* நுகர்வோரும், 400 கிராம் *நெஸ்டமோல்ற்று* பக்கெட்டின் மேலுறையை அனுப்பி இந்த குலுக்கல் சீட்டிழுப்பிற்கு தகமை பெற முடியும். அவர்கள் எத்தனை மேலுறைகளையும் அனுப்பலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. எழுந்தமான அடிப்படையில் அதிர்ஷ்டசாலி வெற்றியாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

கடந்த ஆண்டில் *நெஸ்டமோல்ற்று* SALARY for LIFE போட்டியின் முதன்முதல் வெற்றியாளராக பிலிமத்தலாவ என்ற இடத்தைச் சேர்ந்த 20 வயது நிரம்பிய அவிஷ்கா கொஸ்வத்த அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், இப்போட்டியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, 35 வயது வரையில் *நெஸ்டமோல்ற்று* இடமிருந்து மாதந்தோறும் ரூபா 50,000 தொகையை பெற்று வருகின்றார். இந்த மேலதிக பண உதவியை அவர் தனது வாழ்வில் ஒரு ஆசிரியராக மாறி, குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்ற இலட்சியத்தை சிறப்பாக அடைந்து கொள்ளும் பயணத்திற்கு உபயோகித்து வருகின்றார்.

"*நெஸ்டமோல்ற்று* SALARY for LIFE இன் உதவியால் எனது எதிர்காலப் பயணம் தடையின்றி தொடருகின்றது. தொற்றுநோய் பரவல் காரணமாக ஆசிரியத் தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது இலட்சியம் சற்று தள்ளிப் போனாலும், இத்தகையதொரு காலகட்டத்தில் *நெஸ்டமோல்ற்றிடமிருந்து* எனக்குக் கிடைக்கப்பெறுகின்ற மாதாந்த சம்பளத்தின் உதவியால், எனது கற்றல் பயணம் மற்றும் எனது இலட்சியங்களை அடைந்து கொள்ள வழி பிறந்துள்ளது. எனக்காக மடிகணினியொன்றை நான் வாங்கியுள்ளதுடன், எனது எதிர்கால தொழிலை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் என்னைத் தயார்படுத்த ஒன்லைன் முறையில் நான் கற்று வருகின்றேன்," என்று அவிஷ்கா அவர்கள் குறிப்பிட்டார்

"60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தலைமுறை தலைமுறையாக குடும்பங்கள் மத்தியில் வாழ்வினை சிறப்பாக ஆரம்பிக்க வலுவூட்டி வந்துள்ள நாம், இலங்கையில் வேறு எந்தவொரு வர்த்தகநாமத்தாலும் முன்னெடுக்கப்படாத வகையில், வாழ்க்கையில் அவர்கள் வளர்ச்சி பெற உதவ, இப்பிரச்சாரத்தின் மூலம் எமது உதவியை மற்றுமொரு படி மேலே கொண்டு செல்வது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. முதலாவது ஆண்டில் நாட்டில் *நெஸ்டமோல்ற்று* அபிமானிகள் இதற்கு மகத்தான அளவில் வரவேற்பளித்ததுடன், இப்பிரச்சாரத்தை இரண்டாவது ஆண்டிலும் ஆரம்பிப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. மற்றுமொரு *நெஸ்டமோல்ற்று* அபிமானி தனது இலட்சியங்களை அடைந்துகொள்ள இதன் மூலமாக உதவ ஆவலாக உள்ளோம்," என்று நெஸ்லே நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட உற்பத்திகளுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் குறிப்பிட்டார்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்கள் மத்தியில் நம்பிக்கையை வென்றெடுத்து, அவர்கள் அருந்தி மகிழும் ஒரு தனித்துவமான உற்பத்தியாக *நெஸ்டமோல்ற்று* திகழ்ந்து வருகின்றது. மோல்ற்று அடங்கிய வாற் கோதுமை மற்றும் பாலின் நலச்செழுமை மற்றும் உடலுக்கும், உள்ளத்துக்கும் சக்தியளித்து, நோய் எதிர்ப்புபு சக்திக்கு உதவ இரும்புச்சத்து, கல்சியம் B2, B3, B6, B12, C மற்றும் D போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் செழுமை ஆகியவற்றை வழங்கி, நாட்டில் மிகவும் அபிமானம் பெற்ற புகழ்பூத்த மோல்ற்று அடங்கிய பானமாகத் திகழ்ந்து வருகின்றது.